**கருவூல அலுவலா், மாவட்டக் கருவூலம், திருவள்ளூா் அவா்களின் செயல்முறை ஆணை,**
**பிறப்பிப்பவா் : திரு. மு. பாலமுருகன், பி.எஸ்ஸி. எம்.ஏ. பி.எட்.,**

---

**ந.க.11024/2018/அ2** **நாள் : .12.2018**

**பொருள்:** பொதுப்பணிகள் - கருவூல கணக்குத்துறை – ஒருங்கிணைந்த சாா்நிலைப் பணிகளுக்கான தொகுதி - IV தோ்வு 2015-2016 – தமிழ்நாடு அரசுப்பணியாளா் தோ்வாணையத்தால் ஏற்பளிக்கப்பட்டோா் - கருவூல கணக்குத் துறையில் திருவள்ளூா் மாவட்ட கருவூல அலகில் பணிநியமனம் ஒதுக்கீடு செய்தமை – தட்டச்சா் பதவியில் பணிவரன்முறை செய்தல் - தொடா்பாக.

**படிக்கப்பட்டது**:
1. சம்பந்தப்பட்ட ஒதுக்கீடு ஆணைகள்.
2. முதன்மைச் செயலா்/ஆணையா், கருவூல கணக்குத்துறை, சென்னை-15 செ.மு.ந.க.42944/2017/C3 நாள் : 13.10.2017.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.7703/2017/அ2 நாள் :01.11.2017.

*****

**ஆணை:**

தமிழ்நாடு மாநில மற்றும் சாா்நிலை விதி எண் 23(a)-இன்படி பாா்வை1-ல் கண்டுள்ள ஆணையில் ஒருங்கிணைந்த சாா்நிலை பணிகளுக்கான தொகுதி - IV தோ்வு 2015-2016-ல் தமிழ்நாடு அரசுப்பணியாளா் தோ்வாணையத்தால் ஏற்பளிக்கப்பட்டு திருவள்ளூா் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சோ்ந்த கீழ்காணும் பணியாளரின் பணியினை தட்டச்சா் பதவியில் அவருக்கெதிரே குறிப்பிட்ட பணியில் சோ்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | தோ்வாணைய வரிசை எண். | பெயா் / பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணி வரன்முறை படுத்திய நாள். |
|---|---|---|---|
| 01 | 01 | செல்வன்.ந.காா்த்திக்,<br>தட்டச்சா்,<br>மாவட்டக் கருவூலம், திருவள்ளூா். | 01.11.2017 மு.ப. |

2. மேற்கண்ட பணியாளா் பணிவரன்முறை செய்யப்பட்டதை தொடா்ந்து இவா் தட்டச்சா் பதவியில் மூன்றாண்டு கால தொடா்பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3. மேற்கண்ட பணிவரன்முறை ஆணை சென்னை உயா்நீதிமன்றம் மற்றும் உயா்நீதி மன்ற மதுரைக் கிளையில் ஒருங்கிணைந்த சாா்நிலை பணிகளுக்கான தொகுதி - IV தோ்வு 2015-2016 தெரிவு சம்பந்தமான வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டது எனவும் ஆணையிடப்படுகிறது.

**கருவூல அலுவலா்,**
**திருவள்ளூா்.**

**பெறுநா்** : செல்வன்.ந.காா்த்திக், தட்டச்சா்,
மாவட்டக் கருவூலம், திருவள்ளூா்.
**நகல் :** இருப்பு கோப்பு அ1/அ2.